# அன்பரின் ஊழியம்
## ANBARIN OOZHIYAM

மலர்:9 இதழ்:6 ஜூன் 2023 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-

VOL: 9 ISSUE NO : 6 June 2023 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-






# Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் ஜெபத்தினால் மகத்துவ தேவன் செய்த அற்புதங்கள்! தேவ நாமம் மகிமைக்காக!

## கடித ஊழியத்தின் வாயிலாக கர்த்தர் செய்த மகத்தான அதிசய செயல் இது!

### எளியவர்களை உயர்த்தி ஆசீர்வதிக்கும் கர்த்தர்!



என் பெயர் லோகநாதன். நான் அரசாங்க வேலையில் பல ஆண்டுகளாக பணி செய்துக்கொண்டிருந்தேன். வீடு வாங்கியதில் ஒரு நபரால் ஏமாற்றப்பட்டு கடன் பிரச்சினையில் மாட்டிக்கொண்டேன். அதனால் குடும்பமாக தற்கொலை செய்யவும் ஆயத்தமான நிலையில், பலவித சங்கடங்களை சந்தித்தேன்.

பத்து வருடத்திற்கு முன்பு Dr. ஆனந்த ஸ்திரா அவர்களை அறிந்து என் நிலையை ஒரு கடிதம் வாயிலாக தெரிவித்தேன். சகோதரர் அவர்களிடமிருந்தும் ஜெபித்து பதில் வந்தது. அந்த நாளிலிருந்து கர்த்தர் என்னை ஆசீர்வதித்தார். கடன்கள் அடைந்தது. இப்பொழுது ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள வீட்டை இயேசப்பா தந்திருக்கிறார். அந்த வீட்டில் ஜெபம் நடத்துகிறோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

- சகோ. லோகநாதன், தஞ்சாவூர்.

### என் கணவருடைய ஜீவனை மீட்டுத் தந்த கர்த்தர்! என் மகளுடைய துக்கத்தை மாற்றி, அபிஷேகித்த கர்த்தர்!



என் பெயர் பத்மாவதி. அன்பரின் ஊழிய நீண்ட நாள் பங்காளர். என் வாழ்வில் கர்த்தர் செய்த நன்மைகள் ஏராளம் ஏராளம். அன்பரின் ஊழியம் மூலம் நடைபெறுகிற கூட்டங்களில் தவறாமல் கலந்துக் கொண்டு Dr. ஆனந்த ஸ்திரா அவர்களிடம் பல காரியங்களை சொல்லி ஜெபித்து செல்வோம். அந்த காரியங்களில் எல்லாம் கர்த்தர் அற்புதம் செய்திருக்கிறார்.

2015-ம் ஆண்டில் ஒரு நாள் என் கணவர் மிகவும் பெலவீனப்பட்டார். அந்த நேரத்தில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அவருக்கு சோடியம் குறைந்து சுயநினைவை இழந்து ஆபத்தான நிலையில் காணப்பட்டார். உடனே அன்பரின் ஊழியத்திற்கு தொலைபேசி வாயிலாக தொடர்புக்கொண்டு ஜெபித்தோம். ஜெபிக்கும்பொழுதே ஆண்டவர் என் கணவருக்கு தரிசனம் தந்து, அற்புத சுகத்தை கொடுத்தார். இந்நாள் வரை என் கணவர் ஜீவனோடு வாழ தயை செய்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறோம். ஊழியத்தையும் நேசித்து தொடர்ந்து தாங்கி வருகிறோம்.

எங்கள் மகளுக்கு 7 வயது நிரம்பிய ஒரு பெண் பிள்ளை இருந்தது. திடீரென ஒரு விபத்தில் பேத்தி இறந்து விட்டாள். அதனால் நாங்கள் அனைவரும் மிகுந்த துக்கத்தில் இருந்தோம். என் மகளும் பேத்தியின் இறப்பை தாங்க முடியாமல் 2 வருடமாக மனஅழுத்தத்திற்கு உள்ளானாள். அந்த சூழ்நிலையில் வேலூரில் நடைபெற்ற கூட்டத்திற்கு என் மகள், மருமகன் வந்து Dr. ஆனந்த ஸ்திரா அவர்களை சந்தித்து ஜெபித்து சென்றார்கள். ஜெபித்து சென்ற அந்த மாதத்தில் மகள் மீண்டும் கருவுற்று, ஒரு ஆண் குழந்தையை பெற்றெடுக்க கர்த்தர் உதவி செய்தார். மகளுடைய துக்கத்தை கர்த்தர் தாமே மாற்றினார்.

கடந்த ஏப்ரல் மாதம் வேலூரில் நடைபெற்ற கூட்டத்திற்கும் நாங்கள் குடும்பமாக வந்திருந்தோம். அப்பொழுதும் கூட்டம் துவங்குவதற்கு முன்பே கர்த்தர் என் மகளுடைய பெயரை சகோதரரிடம் சொல்லி, அவளை ஒரு தெபோராளாக தேர்ந்தெடுத்திருப்பதையும் கூறி மகளை தேற்றினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

- திருமதி. பத்மாவதி, குடியாத்தம்.

# அன்பரின் ஊழியம்

மலர்: 9 ◆ ஜூன் 2023 ◆ இதழ் 6




## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு என்னுடைய அன்பான வாழ்த்துக்கள்!

இந்த மாதம் உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவரும் புதிய கல்வியாண்டிற்குள் செல்கிறார்கள். கர்த்தர் தாமே அவர்களை ஆசீர்வதித்து நல்ல சுக, பெலத்துடன் காப்பாராக! **ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார். ஏசாயா 11:2-ன்படி** ஆறு காரியங்களை கர்த்தருடைய ஆவியானவர் அவர்களுக்கு அருளுவார்.

பிள்ளைகள் தினந்தோறும் வேதம் வாசித்து ஜெபித்து விட்டு செல்லும்படி சொல்லுங்கள். பிள்ளைகளால் எந்த பாடங்களை நன்கு படிக்க முடியுமோ அந்த பாடப் பிரிவுகளில் சேர்ந்து படிப்பதற்கு உற்சாகப்படுத்துங்கள்.

கல்லூரியில் சேரும் பிள்ளைகள் வேலை வாய்ப்பு (Job orientation) சம்பந்தப்பட்ட துறைகளை தேர்ந்தெடுத்து படிக்கும்படி சொல்லுங்கள். அவர்கள் அந்த துறையில் Shine பண்ண கர்த்தர் உதவி செய்வார்.

மே மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வாதமாய் நடத்தி தந்தார். ஒரு சிலர் கூட்டங்களை நடத்துவதற்கு sponsor செய்தீர்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். தொடர்ந்து ஜூன் மாதம் நாகர்கோவில், திருச்சி மற்றும் ஐதராபாத்தில் நடைபெறயிருக்கிற அனைத்து கூட்டங்களுக்காகவும் ஜெபியுங்கள். உங்கள் பகுதிகளில் நடைபெறும் கூட்டங்களுக்கு நீங்களும் பொருத்தனையோடு sponsor செய்யலாம்.


ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

| சந்தா விபரம் | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |



**24 மணி நேர ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 94888 45627**

**காலை 9.30 மணி முதல் இரவு 7.00 மணிவரை ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்: 80987 42638**

**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205

e-mail: **info@mojindia.org** website: **www.ministryofjesus.in**

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி – 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

**அன்பரின் ஊழியத்தில் பல பிரிவுகளில் vacancy இருக்கிறது. உங்கள் குடும்பத்தில் படித்து முடித்துவிட்டு வேலைக்காக முயற்சி செய்கிற பிள்ளைகள் உடனே பத்திரிக்கையின் 20-ம் பக்கத்தில் பார்த்து வேலைக்கு உடனே விண்ணப் பிக்கும்படி சொல்லுங்கள்.**

நமது வெப்சைட் பகுதிகளை பாருங்கள். youtube-ல் நமது Ministry of Jesus சேனலை subscribe செய்யுங்கள். தினந்தோறும் வெளி வருகிற அனுதின அற்புதம் நிகழ்ச்சியை தவறாமல் பாருங்கள். உங்கள் வாட்ஸ் அப் நம்பரை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்திற்கு நீங்கள் நேரில் வந்து ஜெபித்து செல்லலாம்.

உலகெங்கும் பாடுபடுகிற மக்களுக்காக ஜெபியுங்கள். மணிப்பூரில் சமாதானம் நிலவ விசேஷமாய் ஜெபியுங்கள்.

ஊழியத்திற்காகவும், ஊழியத்தின் தேவைகள் சந்திக்கப்படவும் ஊக்கமாய் ஜெபியுங்கள்.

எங்கள் அப்பா, அம்மா இருவரின் நல்ல சுகத்திற்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள். எங்கள் அனைவருடைய நல்ல சவுக்கியத் திற்காகவும் ஜெபியுங்கள்.

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வினுடைய கிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக.

**இம்மாத வாக்குத்தத்த வசனங்கள்**

**எரேமியா 32:19**
**எபேசியர் 3:20**
**பிரசங்கி 3:11**
**நீதிமொழிகள் 4:10**

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**

## திருச்சியில் தனி ஜெபம் மற்றும் ஆலோசனை

**ஜூன் 25 ஞாயிற்றுக் கிழமை**

**நேரம் : மதியம் 3.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**

தனி ஜெபம் & ஆலோசனை வழங்குபவர்
**Dr. ஜேன் ஜாஷ்வா**

குடும்ப ஆலோசனைகள், படிப்பு, வேலை, எதிர்காலம் மற்றும் ஆவிக்குரிய ஆலோசனைகளை பெற விரும்புகிறவர்கள் இந்த நாளில் நேரில் வாருங்கள். உங்களுக்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்படும். உங்களுக்காக தனித்தனியாக ஜெபம் ஏறெடுக்கப்படும்.

கீழ்க்கண்ட இந்த எண்ணிற்கு தொடர்புக்கொண்டு முன்பதிவு செய்துப் பிறகு நேரில் வரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

**தொலைபேசி எண்கள் : 94888 45627, 80987 42638, 0431 - 2741925 (10 am-6 pm)**

**Tamil Whats App No: 95004 87059**




### ஐதராபாத்தில்

## அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

**ஜுன் 29**
வியாழக்கிழமை
(அரசு விடுமுறை)

இடம் : YMCA ஹால்,
SP ரோடு, யசோதா மருத்துவமனை எதிரில்,
மணிக்கூண்டு அருகில், செகந்திராபாத்.

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை

**தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா**

தொடர்புக்கு : 91770 87860, 99445 36343

### எமது You Tube சேனல்களை Subscribe செய்யவும்

Ministry of Jesus - Dr. Ananda Stira

Dr Jane Joshua

My Deliverance Church

### எமது முகநூல் பக்கங்கள் (Face book)

Ministry of Jesus (Anbarin Oozhiyam) @ministryofjesus.in

Ananda Stira @dranandastira

Margretstira

Jane Joshua @DrJaneJoshua

My Deliverance Church @mydeliverance.church

Rev.Dr.A. Joshua @RevDrAJoshua

Ministry of Jesus
dr. janejosh
jonathanmosesrajstira

ministryofjesus.in

drjane15



# பதில் தரும் கர்த்தர்
# The Lord Who Answers

*தேவ செய்தி :* **Rev.Dr.A. *ஜாஷ்வா***

கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான பங்காளர்களே, பத்திரிக்கை வாசகர்களே, இந்த மாதத்தின் வாக்குத்தத்த செய்தியின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதித்து உங்களை பெலப் படுத்தி இந்த மாதம் முழுவதும் கூட இருந்து வழி நடத்துவார்.

இந்த மாதத்திலும் தேவன் உங்களுக்கு கொடுக்கிற வார்த்தை, **இயேசு நூற்றுக்கு அதிபதியை நோக்கி: நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். மத்தேயு 8:13** நம்முடைய தேவன் பதில் கொடுக்கிறவர். அவர் ஒரு கடவுள். அவர் பதில் கொடுக்கிறவராக இருக்கிறார். சங்கீதக் காரன் சொல்கிறான். ஜெபத்தை கேட்கிறவரே மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள். நம்முடைய தேவன் ஜெபத்திற்கு பதில் தருகிறவர் என்பதை இந்த சம்பவத்தின் வாயிலாக தியானிக்க இருக்கிறோம்.

இயேசு மலையின்மீது ஏறி ஜனங்களுக்கு மலைப்பிரசங்கத்தை கொடுத்துவிட்டு கீழே இறங்கும்பொழுதே முதலில் குஷ்டரோகி சொஸ்தமாகிறான். பின்பு அவர் கப்பர்நகூம் என்ற பட்டணத்தில் பிரவேசிக்கும்பொழுது அடுத்த அற்புதம் நடக்கிறது. இவ்வாறு அற்புதத்தின் மேல் அற்புதம் நடைபெற்றதை வேதத்தில் நாம் பார்க்கிறோம். இயேசு எங்கெல்லாம் செல்கிறாரோ அங்கெல்லாம் அற்புதங்கள் சர்வ சாதாரணமாக நடை பெற்றதையும் நாம் அறிவோம்.

இயேசுவிடம் வேண்டிக்கொண்ட நூற்றுக்கு அதிபதியை நோக்கி இயேசு கூறியது, **"நீ போகலாம் உன் விசுவாசத்தின்படி உனக்கு ஆகக்கடவது"** இது இயேசு கொடுத்த அருமையான ஒரு பதில். அவன் வேண்டிக் கொண்டதற்கு இயேசுவிடமிருந்து கிடைத்த நல்ல ஒரு பதிலோடு அவன் திரும்பிச்சென்றான். இந்த சம்பவத்தில் நூற்றுக்கு அதிபதியிடம் காணப்பட்ட ஐந்துவிதமான சிறப்பு அம்சங் களைக் குறித்து சற்று விரிவாக பார்க்க போகிறோம்.

## 1. அவன் மிகுந்த பாரத்தோடு இயேசுவிடம் வந்தான்
## (He came with great burden to Jesus)

**இயேசு கப்பர்நகூமில் பிரவேசித்த போது, நூற்றுக்கு அதிபதி ஒருவன் அவரிடத்தில் வந்து, மத்.8:5**

நூற்றுக்கு அதிபதி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் மிகுந்த பாரத்தோடு வந்தான். அவன் வேலைக்காரன் திமிர்வாதமாய் கிடந்து கொடிய வேதனைப்படுகிறதினால், உண்மையான பாரத்தோடு, துக்கத்தோடு மற்றும் எதிர்பார்ப்புடன் கூட இயேசுவிடம் வந்தான். இயேசுவிடத்தில் வந்தால் ஒரு தீர்வு கிடைக்கும் என நம்பி விசுவாசத்துடன் இயேசுவை பார்க்க வந்தான்.

அத்துடன் அவன் இயேசுவைப் பற்றி நன்கு அறிந்தவனாய் தெரிந்தவனாய் இருந்த

படியால் இயேசுவிடம் வந்தான். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிடம் நீங்கள் வரும்பொழுது எப்படி வருகிறீர்கள்? கடமைக்காக, சடங்காச் சாரத்திற்காக வந்தால் ஒன்றும் நடக்காது. நீங்கள் விசுவாசத்துடன், ஒரு எதிர்ப்பார்ப்புடன், முழு மனதுடன் அவரிடம் வரவேண்டும்.

**1 சாமுவேல் 1:10-20** வரையுள்ள வசனங்களில் அன்னாள் மிகுந்த பாரத்துடன் கலக்கத்துடன் எதிர்பார்ப்போடு தேவ சமூகத்தில் வந்து நின்றாள். அவள் தன் இருதயத்தை ஆண்டவரிடம் அப்படியே ஊற்றினாள். அதன்பின் தனக்கு ஒரு அற்புதம் நடக்கும் என்ற எதிர்பார்ப்போடு அந்த இடத்தைவிட்டு சென்றாள்.

நீங்களும்கூட இருதயத்தை ஊற்ற வேண்டிய இடத்தில் ஊற்றும்பொழுது அங்கு அற்புதம் நடக்கும். சிலர் ஊற்றக்கூடாத இடத்தில் இருதயத்தை ஊற்றும்போது பிரச்சனைகள் இன்னும் பெரிதாகி கஷ்டத்துக்கு உள்ளாகி விடுகிறார்கள்.

நூற்றுக்கு அதிபதி சரியான இடத்திற்கு வந்து, சரியான நபரை சந்தித்தான். அவன் நிறைய மருத்துவர்களைகூட பார்த்திருப்பான். ஆனால் பலன் கிடைக்காமல் இருந்திருக்கலாம். எனினும் அவன் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிடம் வருவதற்கு ஒருபோதும் தாமதிக்கவில்லை.

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் யாருக்கு முதலிடத்தை தருகிறீர்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் இயேசுவிடம் கனத்த இருதயத் தோடு, மிகுந்த எதிர்பார்ப்போடு வரும்பொழுது அவர் அனைத்தையும் இலகுவாக்கி தருவார். **மத்தேயு 11:28-ல் வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்** என இயேசு எல்லோரையும் அழைக்கிறார். இது ஒரு வெளிப்படையான அழைப்பு. ஒரு குறிப்பிட்ட நபரை மட்டும் ஆண்டவர் இங்கு அழைக்க வில்லை. எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள் என்றுதான் அவர் அழைக்கிறார். யாரெல்லாம் அவரிடத்தில் வருகிறார்களோ அவர்களுக்கு நிச்சயமாக பதில் உண்டு.

## 2. அவன் இயேசுவிடம் வேண்டுதல் செய்தான்
## (He implored Jesus)

**ஆண்டவரே! என் வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப்படுகிறான் என்று அவரை வேண்டிக்கொண்டான். மத்.8:6**

அந்த நூற்றுக்கு அதிபதி இயேசுவிடம் தன் விண்ணப்பத்தை வைத்து வேண்டிக் கொள் கிறான். இயேசுவிடம் request பண்ணுகிறான். நம்முடைய வேண்டுதலின் ஜெபம் நிச்சயமாக ஒரு அசைவை, ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

அன்பு தேவ பிள்ளைகளே, இந்த நூற்றுக்கு அதிபதி சுற்றும் முற்றும் யாரையும் பார்க்கவில்லை. அநேக நோயாளிகள், ஏழைகள், பாவிகள், ஒதுக்கப்பட்டவர்கள் என பெரிய ஜனக்கூட்டம் இயேசுவை சுற்றி இருந்திருக்கும். அதையெல்லாம் பொருட்படுத்தாமல் தன்னுடைய இலக்கு வேலைக்காரனின் சுகம் என முடிவு செய்தவனாய் அங்கு வந்து இயேசுவிடம் தன் காரியத்தை சொல்கிறான்.

நீங்களும் கூட சில சமயங்களில் இயேசுவிடம் சொல்வதற்கு பதிலாக பிற மனிதர் களிடம் போய் சொல்லி ஏமாந்திருக்கலாம். உங்கள் பிரச்சனைக்கான தீர்வு இயேசுவிடம் மட்டுமே உண்டு என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்.

**யோவான் 5:5-6** வசனத்தில் 38 வருஷ மாய் வியாதி கொண்டிருந்த ஒரு மனுஷனைப் பார்த்து **"நீ சொஸ்தமாக வேண்டும் என விரும்புகிறாயா"** என்று இயேசு கேட்கிறார். **மத்தேயு 20:32-ல்** இயேசு,பார்வையற்ற இருவர்களைப் பார்த்து, **"நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்"** என்று கேட்கிறார். நம் ஆண்டவர் சகலத்தையும் அறிந்தவராய் இருந்தாலும், அவர் பதில் தருவதற்கு முன் உங்கள் பிரச்சனைகள் என்ன என்பதை உங்களிடம் கேட்டு அறிய விரும்புகிறார். ஆகவே நீங்கள் எதற்கும் சோர்ந்துபோகாமல் இயேசுவிடம் வருவது மட்டுமல்ல, உங்கள் கஷ்டங்களை, விண்ணப்பங்களை அவரிடம்

முதலில் சொல்வதற்கு தயங்காதிருங்கள். விசுவாசத்துடன் அவரிடம் சொல்லுங்கள். அதிசயங்களை காண்பீர்கள்.

Tell to Jesus everything, Don't hide Him anything, இயேசுவிடம் எல்லாவற்றையும் சொல்லுங்கள். எதையும் அவரிடம் மறைக்க கூடாது, நாம் மறைத்தாலும் அவருக்கு முன்பாக எல்லாம் வெளியரங்கமாயிருக்கிறது. எனவே நீங்கள் முழுமனதோடு இயேசுவிடம் வேண்டுதல் செய்து அற்புதங்களை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் வேண்டுதலுக்கெல்லாம் அவரே பதில் தருவார்.

## 3. அவன் இயேசுவின் முன் தன்னை தாழ்த்தினான்
## (He humbled himself before Jesus)

**நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல. மத்தேயு 8:8**

நூற்றுக்கு அதிபதியின் தாழ்மை மிகவும் விசேஷித்தமானது. நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல. நான் தகுதி யில்லாதவன் என கூறி தன்னை வெறுமை யாக்குகிறான்.

இவன் ஒரு ஏழையும் அல்ல! செல்வாக்கு குறைந்த மனிதனும் அல்ல. அதிகாரம் பலம் உடையவனே! விசேஷமாக இவன் ஒரு ரோம படைவீரன். 100 போர் வீரர்களுக்கு தலைவன். **நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனா யிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகரு முண்டு, நான் ஒருவனைப் போவென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான், என் வேலைக்காரனை, இதைச் செய்யென்றால் செய்கிறான் என்றான். மத்தேயு 8:9** அவனுக்கும் சில அதிகாரங்கள் இருந்தன. செல்வாக்கு நிறைந்த ஒரு மனிதன் தான். இருப்பினும் தன்னை தேவ குமாரன் முன்பாக தாழ்த்துகிறான். தன்னை தாழ்மைப் படுத்துகிறான். அவருக்கு முன்பாக தாழ்மைப் படுகிற எவரையும் தேவனால் உயர்த்த முடியும். **மத்தேயு 5-ம் அதிகாரத்தில்** மலை பிரசங்கத்தில், ஆவியில் எளிமை உள்ளவர்கள் பாக்கியவான்கள் என இயேசு சொன்னார்.

நம் ஆண்டவர் இயேசு மரண பரியந்தம் தம்மை தாழ்த்தி, நமக்கு எல்லாம் ஒரு நல்ல முன்மாதிரியாக இருக்கிறார். இயேசுவின் பிறப்பிலும் தாழ்மை இருந்தது. இங்கு நூற்றுக்கு அதிபதியின் தாழ்மையைப் பார்த்து இயேசுவே ஒரு நற்சான்றிதழ் கொடுக்கிறார்.

**லூக்கா 15-ம் அதிகாரத்தில்** 3 உவமைகள் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் **லூக்கா 15:21-ல்** இளைய குமாரன் கூட தன் நிலையை யோசித்துப்பார்த்து, தகப்பனே, பரத்துக்கும் விரோதமாகவும், உமக்கு விரோத மாகவும் பாவம் செய்தேன். **"இனி உம்முடைய குமாரன் என சொல்ல பாத்திரன் அல்ல"** என்றான். அதேப்போலதான் இங்கு நூற்றுக்கு அதிபதி, **"ஆண்டவரே நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல"** என்றான்.

**லூக்கா 18-ம் அதிகாரத்தில்** ஜெபிப் பதற்காக இருவர் தேவாலயத்துக்கு செல் கின்றனர். அதில் பரிசேயன் உள்ளே சென்று தன்னைப் பற்றியே பெருமையாய் சொன்னான். ஆனால் ஆயக்காரனோ வாசலுக்கு வெளியே நின்று தன்னை தாழ்த்தி ஜெபித்தான். நம் ஆண்டவர் இயேசு தாழ்மையை அதிகமாக எதிர்பார்க்கிறார். தாழ்மை உள்ளவர்களுக்குத் தான் அவர் கிருபை அளிக்கிறார். **லூக்கா 18:14; 14:11 வசனங்களில் தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படு வான்** என்று கூறப்பட்டுள்ளது. கர்த்தருக்கு முன்பாக தாழ்த்தும் போது அவரே பதில் கொடுத்து உயர்த்துவார்.

## 4. அவன் இயேசுவின் வார்த்தை மீது விசுவாசம் வைத்தான்
## (He believed in Jesus' word)

**ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான். மத்தேயு 8:8.**

நூற்றுக்கு அதிபதிக்கு இருந்த விசுவாசம் விசேஷமானது. இவன் இயேசுவின் போதனையை நீண்ட நேரம் கேட்டிருக்க

வாய்பில்லை. இவன் ஒரு யூதனும் இல்லை. அப்படியென்றால் இந்த விசுவாசம் எங்கிருந்து வந்தது. ஒரு வார்த்தை மாத்திரம் நீங்க சொல்லுங்கள் என மிகுந்த நம்பிக்கையோடு கேட்கிறான். அதுதான் அற்புதத்துக்கு ஆரம்பம்.

**2 இராஜாக்கள் 5-ம்** அதிகாரத்தில் நாம் பார்க்கிறோம். சீரிய இராஜாவின் படைத் தலைவனாகிய நாகமான் குஷ்டரோகியா யிருந்தான். அவன் தீர்க்கதரிசியாகிய எலிசாவை தேடி வந்திருந்தப்பொழுது, எலிசா தன்னைத் தொட்டு சுகமாக்குவான் என நினைத்தான். ஆனால் எலிசா அவனைப் பார்க்கவே இல்லை. செய்யவேண்டியதை மட்டும் சொல்லி அனுப்பினான். அதை ஏற்றுக்கொள்ள நாகமான் முதலில் தயங்கினான். பின்பு அந்த வார்த்தையின்படி செய்தான். பூரண சுகம் பெற்றான்.

சிலர் எங்களிடம் ஜெபிக்க வரும்பொழுது நாங்கள் நீண்ட ஜெபத்தை செய்யும்படி எதிர் பார்ப்பார்கள். ஜெபித்து முடித்தப் பிறகும்கூட அவர்களுக்கு விசுவாசம் இல்லாமல் இன்னும் நன்றாக ஜெபியுங்கள் என்பார்கள். ஆனால் இந்த நூற்றுக்கு அதிபதியின் வாழ்க்கையைப் பாருங்கள். ஆண்டவரின் வார்த்தைமீது எவ்வளவு பெரிய விசுவாசம் இருந்தது.

**மாற்கு 9-ம்** அதிகாரத்தில் ஒரு தகப்பன் அசுத்த ஆவியினால் போராடிக் கொண்டிருக்கிற தன் மகனுக்காக ஆண்டவரை தேடி வருகிறான். அப்பொழுது ஆண்டவரே என் அவிசுவாசம் நீங்கும்படி எனக்கு உதவி செய்யும் என கெஞ்சுகிறான்.எப்பொழுதுமே விசுவாசத்தின் அடிப்படையில் தான் அற்புதங்கள் நடைபெறு கிறது. விசுவாசமில்லாமல் எந்த ஒரு அற்புதங் களும் நடைபெறவில்லை என வேதத்தில் பார்க்கிறோம்.

ஜெப ஆலயத்தலைவரில் ஒருவனாகிய யவீரு கூட இயேசுவிடம் வந்து, உமது கையை வையும் என விசுவாசத்தோடு வேண்டிக் கொள்வதை பார்க்கிறோம். **என் குமாரத்தி மரண அவஸ்தைப்படுகிறாள், அவள் ஆரோக்கியம் அடையும்படிக்கு நீர் வந்து, அவள்மேல் உமது கைகளை வையும், அப்பொழுது பிழைப்பாள் என்று அவரை மிகவும் வேண்டிக்கொண்டான். மாற்கு 5:23**

ஆம். தேவபிள்ளைகளே, **உங்களுக்கும் இயேசுவின் வார்த்தை மீது விசுவாசம் இருக்க வேண்டும். அவருடைய பிரசன்னத்தின் மீது விசுவாசம் இருக்க வேண்டும். அவருடைய தொடுதல் மீது விசுவாசம் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அற்புதங்கள் நடைபெறும்.** இங்கு நூற்றுக்கு அதிபதியின் விசுவாசம் பாராட்டத்தக்கது. உங்களுடைய விசுவாசம் எப்படி இருக்கிறது. நம்பிக்கையோடு விசுவாசத்தோடு ஜெபிக்கும்பொழுதுதான் ஆண்டவர் கிரியை செய்வார். **ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும் என் வேலைக்காரன் சொஸ்தமாவான்.** ஆண்டவர் சொல்கிற அந்த ஒரு வார்த்தையில் ஏராளமான ஆசீர்வாதங்கள் இருக்கிறது என்பதை மறக்காதீர்கள். **மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் லூக்கா 4:4.** நூற்றுக்கு அதிபதி இயேசுவின் வார்த்தையின் மேல் வைத்த விசுவாசத்தின் மூலம் அவனுடைய வேலைக்காரன் சுகமானான்.

## 5. அவன் பிறர் மீது கரிசனை உடையவனாயிருந்தான்
## (He was concerned about others)

நூற்றுக்கு அதிபதிக்கு தன் வேலைக் காரன் மீது ஒரு கரிசனை இருந்தது. அவன் தனக்காக வரவில்லை. தன் மனைவி, பிள்ளை களுக்காக வரவில்லை. ஒரு வேலைக்காரன் மீது உள்ள கரிசனையினால் இயேசுவிடம் வருகிறான்.

சமீபத்தில் கூட ஒரு காரியத்தை குறித்துக் கேள்விப்பட்டேன். ஒரு நிறுவனத்தில் நீண்ட நாட்களாக வேலை பார்த்துக்கொண்டிருந்த ஒரு ஊழியர் திடீரென நோய்வாய்ப்பட்டார். உடனே அந்த எஜமான் அவரை வேலையை விட்டே அனுப்பி விட்டார். இன்னொரு சமயத்தில், ஒரு ஊழியருக்கு விபத்து ஏற்பட்டதினிமித்தம் வேலைக்கு அவரால் வர இயலவில்லை. ஆனால் அவருடைய முதலாளி ஒரு வருடம் முழுவதும் அந்த ஊழியருக்கு சம்பளம் கொடுத்து போஷித்தார் என்பதையும் அறிந்தேன்.

அதேப்போலத்தான் இங்கு நூற்றுக்கு அதிபதி தன் வேலைக்காரன் மீது எவ்வளவு

கரிசனையோடு நடந்துக்கொள்கிறான். இவன் நினைத்திருந்தால் வேறு ஒரு வேலைக்காரனை நியமித்திருக்கலாம். ஆனால் அவன் அவ்வாறு செய்யவில்லை. அவனுடைய வேலைக்காரனும் தன் முதலாளிக்கு எவ்வளவு பிரியமாய், உண்மையாய் இருந்திருப்பான். அதனாலே கூட அவனுக்காக இயேசுவிடம் வந்து வேண்டுதல் செய்திருக்கலாம்.

யோபுவின் வாழ்க்கையைப் பாருங்கள். அவன் சரீரத்தில் வியாதி. மனைவியும் கைவிட்டு விட்டாள். பிள்ளைகள் மரித்து விட்டார்கள். இவைகளின் மத்தியில் யோபு தன் நண்பர்களுக்காக ஜெபித்தான். அவன் நண்பர்கள் மேல் எவ்வளவு கரிசனை பாருங்கள். யோபு தன் நண்பர்களுக்காக ஜெபித்தப்பொழுது கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். இங்கு நூற்றுக்கு அதிபதியும் தன் வேலைக்காரனுக்காக ஜெபிக்கிறான்.

**நீங்களும் மற்றவர்களுக்காக ஜெபியுங்கள். உங்கள் சிறையிருப்பு மாறும். கொர்னேலியு செய்த தர்மங்களே தேவ சந்நிதியில் நினைப்பூட்டுதலாக வந்திருக் கிறது. அது போல நாம் செய்கிறதான தர்மங்கள் நம் சந்ததிக்கு ஒரு ஆசீர்வாதத்தை கொண்டு வரும். நாமும் மற்றவர்கள் மீது எப்பொழுதும் அன்பும் கரிசனையும் வைக்க வேண்டும்.**

நூற்றுக்கு அதிபதியிடம் காணப்பட்ட இந்த சிறப்பு அம்சங்களுக்கு இயேசுவிடமிருந்து ஒரு வெகுமதி கிடைத்தது. நீ ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபுடன் பந்தியிருப்பாய் என்பதே இந்த வெகுமதி. இது மிக முக்கியமானது. இதை எதினாலும் ஒப்பிட்டு பார்க்கமுடியாது. அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோக ராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள். ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள். அங்கே அழுகையும் பற் கடிப்பும் உண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். **மத்.8:11-12.** ராஜ்யத்தின் புத்திரர் இயேசுவை சிலுவையில் அறைந்தனர். ஆனால் கிழக்கிலும், மேற்கிலுமிருந்து வருகிறவர்கள் ராஜ்யத்தின் புத்திரராக மாறி ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுடன் பந்தியில் இருப்பார்கள். இந்த நூற்றுக்கு அதிபதி ஒரு ரோமன். ஆனால் அவன் ராஜ்யத்தின் புத்திரராய் மாறிவிட்டான்.

**இயேசு இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, தமக்குப் பின்செல்லுகிறவர்களை நோக்கி: இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசவாசத்தைக் காணவில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மத்.8:10**

**பின்பு இயேசு நூற்றுக்கு அதிபதியை நோக்கி: நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான். மத்.8:13**

நூற்றுக்கு அதிபதி ஒரு வல்லமையான, அற்புதமான குணமாக்கும் வார்த்தையை இயேசுவிடமிருந்து பெற்றுக்கொண்டு, அதை சுமந்துக்கொண்டு வீட்டுக்கு சென்றான். அங்கே படுக்கையிலிருந்த வேலைக்காரன் சுகம் பெற்று எழுந்து மீண்டும் வேலை செய்து கொண்டு இருந்தான். அதை கண்ட நூற்றுக்கு அதிபதி நீ எப்பொழுது சுகமடைந்தாய் என வேலைக் காரனிடம் கேட்கும்போது அவன் சொன்ன நேரமும், இயேசு நீ போகலாம் என்று சொன்ன நேரமும் ஒன்றுபோல் இருந்தது. இயேசுவிடம் இருந்து நல்ல ஒரு பதிலை அவன் பெற்றுக் கொண்டான். இயேசுவின் ஒரு வார்த்தை இவ்வளவு பெரிய தாக்கத்தை ஏற்படுத்து மானால் இயேசுவே உங்களுக்குள் இருக்கும் பொழுது இன்னும் எவ்வளவு பெரிய செயல்கள் நடக்கும்.

**இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் அன்புக்குரியவர்களே, நீங்களும் நூற்றுக்கு அதிபதியை போல இயேசுவினிடத்தில் வந்து உங்கள் பிரச்சனை களை மிகுந்த தாழ்மையாய் அவரிடத்தில் கூறி விசுவாசத்தோடு காத்திருங்கள். நிச்சயமாக உங்களுக்கும் அவர் பதில் கொடுத்து அற்புதங் களை செய்வார். பிறர் மீதும் கரிசனையுள்ளவர் களாய் அவர்களுக்கு உதவி செய்யுங்கள். அப்பொழுது அவருடைய கற்பனையை நிறை வேற்றி ராஜ்யத்தின் புத்திரராய் மாறுவீர்கள். இயேசுவிடம் இருந்து வரும் பதில் உங்கள் வாழ்க்கையையே மாற்றி செழிப்பாக்கும். நீங்கள் ஆசீர்வாதமாய் இருப்பீர்கள்.**

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

2 கொரிந்தியர் 9:7

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்

மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)

Online Donation (Website)

Bank Account / QR Code

UPI / Google pay / Paytm / Phonepe

இந்த QR code-ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்.

## வங்கிக் கணக்குகளின் விபரம்




| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| A/c no. 10848469699 | A/c no. 10848559426 | A/c no. 10848474869 |

IFS Code: SBIN 0000930

State Bank of India, Cantonment, Trichy Main Branch.

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள். நேரில் அல்லது கூட்டங்களில் எங்களை சந்தித்து காணிக்கையை தரவிரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக்கொள்ளுங்கள். (10.00 AM - 6.00 PM)

**Cell no. 94888 45627, 80987 42638**

உங்களுடைய உற்சாகமான காணிக்கைகள், தசமபாக காணிக்கைகள், பொருத்தனை காணிக்கை மற்றும் ஸ்தோத்திர காணிக்கையை அனுப்பி அன்பரின் ஊழியத்தை தாங்குங்கள்.

கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து உங்களை ஆசீர்வதிப்பார்!

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்

10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 620018.

# ஜூன் மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

ஜூன் 1 யாக்கோபு வேர்பற்றி, இஸ்ரவேல் பூத்துக்காய்த்து உலகத்தைப் பலனால் நிரப்பும் நாட்கள் வரும். (ஏசாயா 27:6)

ஜூன் 2 நேர்த்தியான இடங்களில் எனக்குப் பங்கு கிடைத்தது; ஆம், சிறப்பான சுதந்தரம் எனக்கு உண்டு. (சங் 16:6)

ஜூன் 3 நான் இஸ்ரவேலின் குடும்பத்துக்கும், யூதாவின் குடும்பத்துக்கும் சொன்ன நல்வார்த்தையை நிறைவேற்றுவேன். (எரே. 33:14)

ஜூன் 4 எனக்காக யாவையும் செய்து முடிக்கப் போகிற தேவனாகிய உன்னதமான தேவனை நோக்கிக் கூப்பிடுவேன். (சங். 57:2)

ஜூன் 5 பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது. (ஏசாயா 55:9)

ஜூன் 6 அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை பண்ணலாம்? (சகரியா 4:10)

ஜூன் 7 உம்முடைய துவக்கம் அற்பமாயிருந்தாலும், உம்முடைய முடிவு சம்பூரணமாயிருக்கும். (யோபு 8:7)

ஜூன் 8 நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்தி வந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள். (யோவேல் 2:26)

ஜூன் 9 அந்த அபிஷேகம் சகலத்தையுங் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; (1 யோவான் 2:27)

ஜூன் 10 உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக. (சங். 143:10)

ஜூன் 11 நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு; அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம். (சங். 37:37)

ஜூன் 12 அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி, உமது ஆலோசனைகளை யெல்லாம் நிறைவேற்றுவாராக. (சங். 20:4)

ஜூன் 13 அவனை உறுதியான இடத்திலே ஆணியாகக் கடாவுவேன்; அவன் தன் தகப்பன் வீட்டுக்கு மகிமையான சிங்காசனமாக இருப்பான். (ஏசா. 22:23)

ஜூன் 14 கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார். (சங். 138:8)

ஜூன் 15 தேவனே, உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள்; அவைகளின் தொகை எவ்வளவு அதிகம். (சங். 139:17)

நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான். (நீதி. 24:16) — ஜூன் 16

ஜூன் 17 — இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன். (ஏசா. 46:6)

இன்னும் என் பட்டணங்கள் நன்மையினால் பரம்பியிருக்கும்; இன்னும் கர்த்தர் சீயோனைத் தேற்றரவு பண்ணுவார். (சகரி. 1:17) — ஜூன் 18

ஜூன் 19 — உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர். (சங். 73:4)

நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண் போகாது. (நீதி. 23:18) — ஜூன் 20

ஜூன் 21 — நீங்கள் புற ஜாதிகளுக்குள்ளே... ஆசீர்வாதமாயிருக்கும்படி நான் உங்களை இரட்சிப்பேன். (சகரியா 8:13)

அவன் என்றென்றைக்கும் அசைக்கப்படாதிருப்பான்; நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன். (சங். 112:6) — ஜூன் 22

ஜூன் 23 — என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை. (யோவேல் 2:26)

ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது. (பிரசங்கி 7:8) — ஜூன் 24

ஜூன் 25 — உன் முடிவைப் பற்றி உனக்கு நம்பிக்கையுண்டு. (எரே. 31:17)

என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது; (சங். 31:15) — ஜூன் 26

ஜூன் 27 — நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். (எரே. 29:11)

மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னை விட்டு விலகாமலும்... இருக்கும். (ஏசா. 54:10) — ஜூன் 28

ஜூன் 29 — உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டு பண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது! (சங். 31:19)

தேவனே, உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை, நீரேயல்லாமல் உலகத்தோற்றம் முதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை. செவியால் உணர்ந்ததுமில்லை, அவைகளைக் கண்டதுமில்லை. (ஏசா. 64:4) — ஜூன் 30



## பங்காளர்கள் பக்கம்

# நடக்கவும் பேசவும் இயலாத குழந்தைக்கு அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி வாயிலாக கர்த்தர் செய்த மகத்தான செயல்!

என் பெயர் நிஜா. என்னுடைய மூத்த மகன் பெயர் ஜோன். அவன் மூன்று மாத கைக்குழந்தையாக இருந்தபொழுது ஒருநாள் இரவு 12 மணியளவில் எந்தவித உணர்வில்லாமல் அசைவில்லாமல் அப்படியே இருந்தான். உடனே திருவனந்தப்புரத்தில் உள்ள மருத்துவமனைக்கு தூக்கிச்சென்றோம். அங்கு குழந்தைக்கு சிகிச்சை அளிக்க முதலில் மறுத்துவிட்டனர். அதன் பின்னரே சிகிச்சை அளித்தனர். 18 நாட்கள் குழந்தையினிடத்தில் எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை. குழந்தையை பரிசோதித்த மருத்துவர்கள் "உங்கள் குழந்தை வளர்ந்து வரும்பொழுது நார்மல் குழந்தையைப் போல நடக்க முடியாது, பேசுவதும் கடினம்" என சொல்லியே அனுப்பினார்கள்.

மிகுந்த மனபாரத்துடன் குழந்தையை வீட்டிற்கு தூக்கி வந்தோம். ஒரு வாரமாக எங்களுக்கு தூக்கம் வரவில்லை. குழந்தையை மடியில் கிடத்தி வைத்தவாறே என்ன செய்வதென தெரியாமல் நானும், என் கணவரும், அத்தையும் கண்ணீரோடு இருந்தோம்.

ஒரு நாள் திடீரென டி.வி.யை ஆன் செய்தபொழுது அன்பரின் ஆறுதல் டி.வி.நிகழ்ச்சியில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் செய்தியளித்து கொண்டிருந்தார்கள். செய்தி முடிந்து குழந்தைகளுக்கான விசேஷித்த ஜெபத்தை சகோதரர் ஏறெடுத்தார்கள். நானும், என் அத்தையும் எங்கள் குழந்தைக்காக சகோதரரோடு இணைந்து சாட்சி சொல்வதாக பொருத்தனையோடு ஜெபித்தோம்.

அதன்பின் குழந்தையின் செயல்பாடுகளில் ஒரு முன்னேற்றம் இருப்பது தெரிந்தது. நாட்கள் செல்லச் செல்ல என் குழந்தை நன்றாக நடக்க ஆரம்பித்தான். விரைவில் பேசவும் ஆரம்பித்தான். எந்த குறைபாடும் இல்லாதபடி கர்த்தர் இந்நாள் வரை என் மகனை பாதுகாத்து வருகிறார். மருத்துவரின் கூற்றையே மாற்றி என் மகனுக்கு பரிபூரண சுகத்தை தந்த கர்த்தரை மனதார துதிக்கிறேன். அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி வாயிலாக கர்த்தர் செய்த மகத்தான செயலை நாங்கள் ஒரு போதும் மறக்கமாட்டோம். ஐயா அவர்களுக்கும் எங்களுடைய நன்றியை அன்போடு தெரிவிக்கிறோம்.

திருமதி.நிஜா, நாகர்கோவில்.

- ஆம் பிரியமானவர்களே! அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சிகள் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு வருகிறது. அநேக ஆத்துமாக்கள் பயன் அடைகின்றனர்.
- சகோதரி நிஜாவின் குழந்தைக்கு கர்த்தர் இரங்கி அதிசயம் செய்ததுபோல இன்னும் ஏராளமான குழந்தைகள், நோயாளிகள் அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சிகள் வாயிலாக சுகம் பெற்று வருகின்றனர்.
- நமது தொலைக்காட்சி ஊழியம் பின்மாற்றம் அடைந்த அநேக கிறிஸ்தவர்களை தட்டி எழுப்புவதாக இருக்கிறது.
- தற்கொலைக்கு நேராக போகிற பிள்ளைகள் மனம்மாறி இயேசுவை ஏற்றுக் கொள்கின்றனர்!
- பல ஆயிரக்கணக்கான மக்கள் இந்நிகழ்ச்சிகளை பார்க்கின்றனர். ஒரு டி.வி. நிகழ்ச்சியை தயாரித்து வழங்க சுமார் 20 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. டி.வி. நிகழ்ச்சிகளுக்காக மாதந்தோறும் நாம் பல இலட்சங்களை செலவு செய்கிறோம். இந்த பணத்தேவைகள் சந்திக்கப்பட ஊக்கமாய் ஜெபியுங்கள்.
- நீங்களும் உங்கள் குடும்பத்தின் சார்பாக ஒரு டி.வி. நிகழ்ச்சியை தாங்குவதற்கு முன்வாருங்கள். உங்கள் பிரயாசத்தின் வாயிலாக மிகப்பெரிய ஆத்தும அறுவடையை கர்த்தர் தாமே கட்டளையிடுவார். உங்களுக்குரிய பலன் இம்மையிலும் மறுமையிலும் நிறைவாக நிச்சயமாக அருளப்படும்.

அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்

தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

நம்பிக்கை TELEVISION

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 முதல் 9.00 வரை

தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

புதன், வியாழன், வெள்ளி,
இரவு 7.00 முதல் 7.30 வரை

மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

சனி
இரவு 7.30 முதல் 8.00 வரை



# Praise Report
# துதி அறிக்கை

## மூன்று குடும்பத்தினருக்கு குழந்தை பாக்கியத்தை அருளிய கர்த்தர்!



என் பெயர் மங்கையர்க்கரசி. கணவர் பெயர் வில்சன். எங்களுக்கு 2005-ம் ஆண்டு திருமணம் ஆனது. அதன்பின் 5 வருடங்களாக குழந்தை இல்லை. அதற்காக பல சிகிச்சைகளை மேற்கொண்டோம். எந்த பயனும் இல்லை. **முடிவில் 2010-ம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு நானும் என் கணவரும் வந்து கலந்துக் கொண்டோம். ஜெப வேளையில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்களிடம் எங்கள் நிலையை சொல்லி குழந்தைக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டோம். சகோதரர் பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். ஜெபத்தை கேட்ட கர்த்தர் தாமே 2011-ல் எங்களுக்கு ஆண் குழந்தை பிறக்க உதவி செய்தார்.**

**அதன்பின் சொந்த வீட்டிற்காக ஜெபிக்கும்படி சொன்னோம். சகோதரர் ஜெபித்துவிட்டு கடன் இல்லாத வீட்டை ஆண்டவர் தருவார் என சொல்லி ஜெபித்தார்கள். பரிசுத்தவானின் வார்த்தைபடியே கடன் இல்லாமல் வீட்டை கட்டி முடிக்க கர்த்தர் தயை செய்தார்.**

**என் கணவர் அரசு அலுவலகத்தில் சாதாரண ஒரு வேலையை பார்த்துக்கொண்டு வந்தார். நாங்கள் கூட்டத்திற்கு வரும்பொழுதெல்லாம், சகோதரர் பாரத்துடன் ஜெபித்து, தானியேலைப் போல கர்த்தர் அவரை உயர்த்துவார் என சொல்வார்கள். கர்த்தர் அவர்கள் ஜெபத்தைக் கேட்டு, சாதாரண நிலையிலிருந்த என் கணவர் BDO வரை உயர்த்தப்படவும், அதன் பின்னரே பணி ஓய்வு பெறவும் கர்த்தர் கிருபை செய்தார்.**

என் அண்ணன் பெயர் சுந்தரபாண்டி. அவர்களுக்கும் குழந்தை இல்லை. **அவர்கள் மதுரையில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்து ஜெபித்து சென்றார்கள். கர்த்தர் அவர்களுக்கும் ஆண் குழந்தையைத் தந்தார். அவனுக்கு 4 வயது நடக்கிறது.**

**என் தங்கை பெயர் இளம்பிரை. அவர்களுக்கும் 10 வருடங்களாக குழந்தை இல்லை. அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்திற்கு வந்து ஜெபித்து சென்றார்கள். இப்பொழுது அவர்களுக்கு ஒன்றரை வயதில் இரண்டு குழந்தைகள் இருக்கிறது.**

எங்கள் அனைவருக்கும் கர்த்தர் செய்த அனைத்து அதிசயங்களுக்காகவும் கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறோம். கர்த்தர் செய்த அனைத்து நன்மைகளையும் மறவாமல் ஏப்ரல் மாதம் தாராபுரத்தில் நடைபெற்ற கூட்டத்தின் முழு செலவையும் நாங்கள் பொறுப்பெடுத்து அன்பரின் ஊழியத்தை தாங்குகிறோம்.

**- திருமதி. மங்கையர்கரசி வில்சன், தாராபுரம்.**

## 22 வருட சத்துருவின் போராட்டத்திலிருந்து அற்புத விடுதலையைத் தந்த இயேசுகிறிஸ்து!




என் பெயர் மணிமேகலை. நான் கிறிஸ்துவை அறியாத குடும்பத்தில் பிறந்து வளர்ந்தேன். எனக்கு பேய் பிடித்து அதிக கஷ்டப்பட்டேன். அதற்காக பல இடங்களுக்கு சென்றும் எனக்கு விடுதலை இல்லை. அதன்பின் ஒரு சகோதரி வாயிலாக திருச்சியில் நடைபெறுகிற அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டத்திற்கு வந்தேன்.

**ஜெப வேளையில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் என் தலைமேல் கை வைத்து ஜெபித்தப்பொழுது 22 வருடமாக என்னை கஷ்டப்படுத்திய அந்த பிசாசு வெளியேறியது. இயேசுகிறிஸ்துவின் சிலுவையை பார்த்தேன். அந்த சிலுவையிலிருந்து ஒரு ஒளி வந்து, "பயப்படாதே" என என்னோடு பேசிய கர்த்தரின் குரலைக் கேட்டேன். அன்றிலிருந்து நான் விடுதலை ஆனேன்.** இம்மட்டும் என்னை அற்புதமாய் பாதுகாத்து வருகிற கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.

**- திருமதி. மணிமேகலை, பட்டுக்கோட்டை.**

## புதுபெலனைத் தந்து சாட்சியாக நிறுத்திய கர்த்தர்!



2021-ம் ஆண்டு நவம்பர் மாதம் நான் கீழே விழுந்ததில் என்னுடைய இடது கை உடைந்துப்போய்விட்டது. மருத்துவர்கள் பரிசோதித்துவிட்டு இரண்டு ஆப்ரேஷன் செய்ய வேண்டும் என கூறிவிட்டனர்.

நாங்கள் ஆப்ரேஷன் செய்ய பயந்து நாட்டு வைத்தியத்தை மேற்கொண்டோம். கை வீங்கி மரவள்ளிக்கிழங்கு போல உருண்டையாக இருந்தது. கை முழிக்கூட தெரியவில்லை. கை விரல்களை என்னால் மடக்க முடியவில்லை. அதிக கஷ்டங்களை அனுபவித்தேன். என் கணவர்தான் எனக்கு எல்லா வேலைகளும் செய்துக்கொடுத்தார். அந்த சூழ்நிலையில் **திருச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து, Mrs. மார்கிரேட் ஸ்திரா அவர்களிடம் என் கையைக் காட்டி ஜெபிக்கும்படி சொன்னேன். ஜெபத்திற்கு பின் என் கையின் முழி தெரிய ஆரம்பித்தது. கை நன்றாக இயங்கியது. மீண்டும் இயல்பு நிலைக்கு வந்தது. இந்த கையால் எல்லா வேலைகளையும் செய்வதற்குரிய புது பெலனை ஆண்டவர் தந்தார்.**

என் அப்பா பெலவீனப்பட்டு படுக்கையில் வெறும் பால் மட்டும் இறங்கும் நிலையில் இருந்தார். அன்பரின் ஊழியத்திற்கு பொருத்தனை செய்து ஜெபித்தேன். இப்பொழுது என் அப்பா நன்றாக சாப்பிடுவதற்குரிய பெலனை ஆண்டவர் தந்திருக்கிறார்.

இயேசப்பாவிற்காக ஒரு கடா ஆட்டை நான் பொருத்தனையோடு வளர்த்து வந்தேன். திடீரென அந்த ஆடு காணாமல் போனது. அதற்காகவும் ஜெபிக்கும்படி போன் வாயிலாக கேட்டுக்கொண்டேன். அதன்பின் இரண்டு ஊரைத் தாண்டி, எங்கள் ஆடு நிற்பதை அறிந்து பிடித்துக்கொண்டு வந்தோம். அந்த ஆட்டை விற்று கிடைத்த பணத்தை அன்பரின் ஊழியத்திற்கு பொருத்தனை காணிக்கையாகத் தருகிறேன்.

**- திருமதி. வனிதா, தஞ்சாவூர்.**

## ஜீவனை பாதுகாத்த அதிசய தேவன்!



என் பெயர் உத்திராபதி. திருச்சியில் நடைபெறுகிற கூட்டத்திற்கு நான் தவறாமல் தொடர்ந்து வந்துக்கொண்டிருக்கிறேன். கடந்த ஏப்ரல் மாதம் என்னுடைய மகன் தஞ்சாவூரிலிருந்து திருச்சிக்கு பைக்கில் சென்றுக் கொண்டிருந்தப்பொழுது பின்புறமாக வந்த Car மகனுடைய பைக் மீது வேகமாக மோதியதில் மகன் பைக்கோடு சேர்த்து உயரத்தில் தூக்கி எறியப்பட்டான். உடனே மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மருத்துவர்கள் வர தாமதம் ஆனது.

சிகிச்சைக்குப்பின் தலையில் 13 தையல் போட்டார்கள். கால்கள், இடுப்பு பகுதியில் வலி இருந்தது. இருப்பினும் **உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லாதபடி கர்த்தர் தாமே எங்கள் மகனை அற்புதமாக பாதுகாத்தார். வண்டி நொறுங்கிவிட்டது. ஆனால் எங்கள் மகன் ஜீவனோடு திரும்பியதைப் பார்த்து அனைவரும் ஆச்சரியப்படும் வகையில் கர்த்தர் என் மகனை காப்பாற்றினார். கர்த்தருக்கு கோடா கோடி ஸ்தோத்திரங்கள்!**

**- திரு. உத்திராபதி, தஞ்சாவூர்.**

## தீர்க்கதரிசன வார்த்தைகளை நிறைவேற்றிய கர்த்தர்!



என் பெயர் மேரி. எனக்கு திருமணம் ஆகி 7 வருடங்களாக குழந்தை இல்லை. அப்பொழுது பொள்ளாச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களை நேரில் சந்தித்து ஜெபித்தப் பொழுது, சகோதரர் அவர்கள் எனக்கு 3 காரியங்களை தீர்க்கதரிசனமாக கூறி ஜெபித்தார்கள்.

**நாங்களும் விசுவாசத்துடன் சென்றோம். சகோதரர் சொன்ன அந்த 3 தீர்க்கதரிசன வார்த்தைகளை கர்த்தர் அப்படியே நிறைவேற்றினார். எங்களுக்கு இரண்டு பெண் குழந்தைகளை கர்த்தர் தந்தார். என் கணவருக்கு அரசாங்க வேலை கிடைத்தது. சொந்த வீடு கட்டினோம். கர்த்தருக்கு சகல துதி கன மகிமையை செலுத்துகிறோம்.**

**- திருமதி. மேரி, பழனி.**

## அற்புத சுகத்தை அருளிய கர்த்தர்!



என் பெயர் ராதா. நான் காச நோயினால் மிகவும் துன்புற்றேன். எழுந்து நடக்க முடியாதபடி கைகளால் ஊர்ந்து செல்லும் நிலைக்கு உள்ளானேன். **2012-ல் பொள்ளாச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு ஒரு சகோதரி என்னை அழைத்து வந்தார்கள். மிகவும் வேதனையுடன் கூட்டத்தில் அமர்ந்திருந் தேன். ஜெப நேரத்தில்** Dr. ஆனந்த ஸ்திரா **அவர்கள் என்னை பேர் சொல்லி அழைத்து என் தலைமீது கை வைத்து ஜெபித்தார்கள். அப்பொழுது ஒரு ஆவி என்னைவிட்டு வெளியேறியது. அதன்பின் பரிபூரண விடுதலையோடு நான் சென்றேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் எனக்காக ஜெபித்த சகோதரர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன்.**

**- சகோதரி. ராதா, உடுமலைப்பேட்டை.**

## திருமண தடையை நீக்கிய கர்த்தர்!



என் பெயர் ஏஞ்சலின். என்னுடைய திருமணம் தடையாகவே இருந்தது. அந்த சூழ்நிலையில் திருச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு நாங்கள் வந்திருந்தோம். கூட்டம் முடிந்து **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் எனக்காக ஜெபித்துவிட்டு, திருமண தடை நீங்கும் என சொல்லி அனுப்பினார்கள்.

**ஜெபித்து சென்றப்பிறகு மூன்றே மாதத்தில் எனக்கு நல்ல வரன் கிடைத்து திருமணம் நடைபெற்றது. திருமண தடையை நீக்கிய கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். பாரத்துடன் ஜெபித்த சகோதரர் அவர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம்.**

**- திருமதி. ஏஞ்சலின், தாராபுரம்.**

## இக்கட்டான நேரத்தில் ஒத்தாசை செய்த கர்த்தர்!



அனில்குமாரின் சகோதரி

என் பெயர் அனில் குமார். ஒரு சில ஆண்டுகளுக்கு முன் என் அக்காவிற்கு சுகர் அளவு அதிகமாகி, மிகுந்த பெலவீனத்துடன் இருந்தார்கள். அந்த நேரத்தில் அக்காவின் மகனுக்கு திருமண ஏற்பாடும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அக்காவின் உடல் நிலை பெலவீனப்பட்டு இருந்ததால் எங்களால் மேற்கொண்டு என்ன செய்வது என தெரியவில்லை.



உடனே அன்பரின் ஊழியத்திற்கு தொலைபேசி வாயிலாக தொடர்புக்கொண்டு அக்காவிற்காக ஜெபிக்கும்படி சொன்னேன். ஒரு சகோதரி ஜெபித்தார்கள். **அதன்பின் தேவ கிருபையால் என் அக்காவின் சர்க்கரை அளவு குறைந்தது. அக்கா மகனுடைய திருமணமும் ஆசீர்வாதமாக நடந்து முடிந்தது. தற்பொழுது அக்காவின் சுகர் நார்மலுக்கு வந்து, மாத்திரைகளை குறைக்கும்படி கர்த்தர் உதவி செய்து இருக்கிறார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.**

**- சகோ. அனில்குமார், கோயம்புத்தூர்**

**இவ்வாறு அன்பரின் ஊழியம் வாயிலாக கர்த்தர் செய்து வருகிற அதிசயங்கள் ஏராளம் ஏராளம். சாட்சிகளை வாசிக்கிற நீங்களும் திருச்சியில் மாதந்தோறும் நடைபெறுகிற அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டத்திற்கு வாருங்கள். கர்த்தர் உங்கள் வாழ்க்கையிலும் இத்தகைய அதிசயங்களை செய்வார்.**

dranandastira@mojindia.org, margret@mojindia.org, joshua@mojindia.org, jane@mojindia.org, info@mojindia.org

Trichy

# WE ARE HIRING



- **Accountant**
  **(B.com. / M.com. Graduates)**
  *Skills Required : Tally ERP 9*
- **Data Entry Operators**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in computing skills*
- **Correspondence**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Typing & computing skills (Tamil, English, Telugu)*
- **Social Media Executive**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in social media platforms , Good in English & Tamil*
- **Video Editors**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Premiere Pro & After Effects*
- **Graphic Designers**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Photoshop & Illustrator*
- **Camera Man**
  **with adequate experience**
- **Drivers**
- **Cooks**
- **House Keepers**

- **Male / Female**
- **Christians Preferred**
- **Accommodation will be provided**
- **Apt Remuneration will be paid**

Apply to :

**info@mojindia.org**



# SJ SAVES TRUST மூலமாக நடத்தப்பட்ட மே மாத விடுமுறை பயிற்சி வகுப்புகள்

கடந்த மே மாதம் சேலம் மாவட்டம் மேட்டுப்பட்டி, அயோத்தியா பட்டணம், கருமாபுரம், அக்ரஹாரம் பகுதிகளில் **SJ SAVES TRUST** மூலமாக விடுமுறை பயிற்சி வகுப்புகள் இரண்டு நாட்கள் நடைபெற்றது. நம் டியூசன் சென்டரில் படிக்கும் பிள்ளைகள் 300 பேர் உற்சாகமாய் வந்து கலந்துக்கொண்டு பயன் அடைந்தனர்.

நல்லொழுக்க வகுப்புகள், கணினி பயிற்சி வகுப்புகள், தையல் பயிற்சிகள், Glass painting, மற்றும் Hand bag, Paper cup, Paper plate தயாரிக்கும் முறைகள் பற்றி ஆசிரியர்கள் மூலம் கற்றுத் தரப்பட்டது.

மேலும் தனிமனித ஒழுக்கம், சமுதாய முன்னேற்றம் ஆகிய தலைப்புகளில் பிள்ளைகள் விரும்பும் வண்ணம் பல்வேறு விளையாட்டுகள் மூலமாக கற்றுக் கொடுக்கப்பட்டது.

இரு நாட்களும் பிள்ளைகளுக்கு மதிய உணவு, பழச்சாறு, டீ, சிற்றுண்டி ஆகியவை வழங்கப்பட்டது.

இறுதியில் நமது ஸ்தாபகர் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் பிள்ளைகள் மத்தியில் சிறப்பு விருந்தினராக பங்குபெற்று பிள்ளைகளுடன் விளையாடி மகிழ்ந்தார். பின்னர் விளையாட்டுகளில் பங்குபெற்ற பிள்ளைகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார்.

## விடுமுறை வகுப்புகளின் சிறப்பம்சங்கள் :

- ★ பாடல், நடனம், குறுநாடகம் மூலமாக நல்லொழுக்கம் கற்றுக்கொடுக்கப்பட்டது.
- ★ Puppet Show மற்றும் Games மூலமாக சிறுவர்களின் கவனத்தை ஈர்த்து ஒழுக்கம், அன்பு, பணிவு, மரியாதை ஆகிய பண்புகள் போதிக்கப்பட்டன.

## கலந்துகொண்ட பிள்ளைகளின் பின்னணி :

மேட்டுப்பட்டி, அயோத்தியா பட்டணம், கருமாபுரம், அக்ரஹாரம் போன்ற பகுதியில் உள்ள பிள்ளைகள் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் குடும்பத்தையே சேர்ந்தவர்கள். அதில் அநேகர் கூலித் தொழிலாளியின் பிள்ளைகள், சரீர குறைபாடு மற்றும் மூளை வளர்ச்சி குறைபாடு உடையவர்கள்.

இந்த குழந்தைகளின் பெற்றோர் படிப்பறிவில்லாமையால் குடிக்கு அடிமையாகி பிள்ளைகளை கண்டு கொள்வதில்லை. எனவே அநேக பிள்ளைகள் சிறு வயதிலேயே உணவின்றி, நல்ல உடையின்றி வேலைக்கு செல்லும்படி தள்ளப்படுகிறார்கள்.

பெண் பிள்ளைகள் உடல் அளவிலும், மனதளவிலும் அதிக பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். இதில் அநேக பிள்ளைகள் தங்கள் வீட்டில் ஒரு வேளை கூட நல்ல உணவின்றி பசியால் தவித்தும் வருகின்றனர்.

இத்தகைய பிள்ளைகளுக்கு **SJ SAVES TRUST** மூலமாக நடத்தப்படும் விடுமுறை பயிற்சி வகுப்புகள் இவர்கள் வாழ்க்கையில் ஒரு தன்னம்பிக்கையை, மகிழ்ச்சியை தந்து முன்னேற்றத்தின் பாதையில் நடத்துகிறது.

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act–ன்படி Sec. 80G Exemption உண்டு**

# S.J.S.T கிராமப்புற மருத்துவமனை பணிகள்

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நோயாளிகளை தொட்டும், தம் வார்த்தையினாலும் பலரை சொஸ்தமாக்கி இருப்பதை நாம் வேதத்தில் பல இடங்களில் வாசித்து இருப்போம். நம் தனிப்பட்ட வாழ்க்கையிலும் அதை உணர்ந்திருப்போம். அத்துடன் இயேசு தாமே நம் நோய்களை சுமந்தார் என்பதை **மத்தேயு 8:17-ன்** வாயிலாக அறிவோம்.

ஆம். இத்தகைய தேவனின் மனதுருக்கத்தின்படி துவங்கப்பெற்ற நமது கிராமப்புற மருத்துவமனை நல்லமுறையில் இயங்கி வருவதற்காக தேவனை ஸ்தோத்தரிப்போம்.

அன்பு பங்காளராகிய நீங்களே மருத்துவபணிகளுக்கு இந்நாள் வரை உதவி செய்து வருகிறீர்கள். உங்கள் உதவிக்கும் எங்களுடைய நன்றியை அன்போடு தெரிவிக்கிறோம்.

**மருத்துவமனை கட்டுவதற்கான புதிய திட்டங்கள் நிறைவேற, அதற்குரிய தேவைகள் சந்திக்கப்பட, நல்ல பணியாளர்கள் கிடைக்க ஜெபியுங்கள். தொடர்ந்து உற்சாகமாய் தாங்குங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து காப்பாராக!**



**சேலம் மாவட்டம் மேட்டுப்பட்டி, கருமாபுரம், அக்ரஹாரம் பகுதிகளில் SJ SAVES TRUST மூலமாக விடுமுறை பயிற்சி வகுப்புகள் இரண்டு நாட்கள் நடைபெற்றது. நம் டியூசன் சென்டரில் படிக்கும் 300 பிள்ளைகள் உற்சாகமாய் வந்து கலந்துக்கொண்டு பயனடைந்தனர்.**

















# உலகச் செய்திகள்






- சூரியனின் செயல்பாடு பற்றி நாசா விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர். இந்நிலையில் சூரியனில் பூமியை விட 20 மடங்கு பெரிய அளவிலான கருமையான பகுதி தென்படுவதை நாசா விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். இது "கொரோனல் ஓட்டை" என்று விஞ்ஞானிகளால் அழைக்கப்படுகிறது.
- பார்ப்பதற்கு சூரியனின் ஒரு பகுதி காணாமல் போனது போன்று காட்சி அளிக்கிறது. கொரோனல் ஓட்டையை சூரியனின் தென் துருவபகுதி அருகே கடந்த 23-ந்தேதி நாசாவின் சூரிய இயக்கவியல் ஆய்வகம் கண்டறிந்துள்ளது.
- கொரோனல் ஓட்டை தோன்றியதால் புவி காந்தபுயல்கள் அல்லது சூரியகாற்று ஏற்படக்கூடும் என அமெரிக்காவின் தேசிய கடல் மற்றும் வளிமண்டல நிர்வாக அமைப்பான என்.ஓ.ஏ.ஏ. எச்சரிக்கை விடுத்துள்ளது. ஏனெனில், கொரோனல் ஓட்டையில் இருந்து புறப்படக்கூடிய மணிக்கு 2.9 லட்சம் கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடிய சூரிய காற்றானது பூமியை நோக்கி வரும் என்றும், அது வெள்ளிக்கிழமை நடைபெறும் என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளன.
- இதனால் பூமியின் காந்தபுலம், செயற்கை கோள்கள் மற்றும் தொழில்நுட்பத்தில் பாதிப்பை ஏற்படுத்துமா? என்பதை பார்க்க விஞ்ஞானிகள் நிலைமையை உன்னிப்பாக கண்காணித்து வருகின்றனர். சூரியனில் ஒரு வாரத்தில் தோன்றிய 2-வது துளை இதுவாகும்.
- இது குறித்து நாசா அதிகாரிகள் கூறுகையில், கொரோனல் துளைகள் என்பது அதி வேக சூரிய காற்றின் ஒரு ஆதாரமான காந்த பகுதிகளாகும். தீவிரபுற ஊதா ஒளியின் பல அலை நீளங்களில் பார்க்கும் போது அவை இருட்டாக தெரியும் என்றனர்.

---

- வெயிலுக்கு இதமான உணவு என்றால் அது பழைய சோறு தான், வாய்க்கு ருசியாக மட்டுமின்றி வயிற்றுக்கும் இதமாக இருக்கும். நம் தாத்தா பாட்டி காலங்களில், உணவில் முக்கிய இடம் பிடித்திருந்த இந்த பழைய சோறு நாளாக நாளாக காணாமலேயே போய்விட்டது. அதற்கு முக்கிய காரணம் பானையில் வடித்த காலம் போய் இப்போது குக்கர் புழக்கத்தில் உள்ளது தான். ஆனாலும் பழையசோறுக்கு ரசிகர்கள் இன்றளவும் இருக்கத்தான் செய்கிறார்கள்.
- முதல் நாள் இரவு சமைத்த உணவு மிச்சமானால் அதில் தண்ணீர் ஊற்றி அடுத்த நாள் காலை மோர் ஊற்றியோ சின்ன வெங்காயத்தை பொடியாக தூவியோ சாப்பிட்டால் ஆகா அது அமிர்தம் தான். ஆனால் குக்கர் சாப்பாட்டில் அந்த ருசி வருவது இல்லை. அதனால் பழைய சோறு கிடைக்காதா? என்ற ஏக்கம் பலரிடம் உள்ளது.
- இவர்களின் ஏக்கத்தை புதுவை செஞ்சி சாலையில் உள்ள தனியார் உணவகம் போக்கியுள்ளது. இந்த உணவகத்தில் பெருமளவு உணவுகளை பானையில் வைத்து தான் பரிமாறுகின்றனர். மேலும் இங்கு தினந்தோறும் சுவையான பழையசோறு, மண் பானையில் பல்வேறு தொடு கறிகளுடன் விற்கப்படுகிறது.

# ஜார்ஜ் முல்லர்

## (1805 - 1898)



நீங்கள் வேதாகமத்தை முழுமையாக வாசித்தது உண்டா? விசுவாச வீரன் ஜார்ஜ் முல்லர் முழுமையாக வாசித்திருக்கிறார். ஒன்று, இரண்டு முறை அல்ல. இருநூறு முறைகள். நம்ப முடிய வில்லையா? அதிலும் நூறு முறைகள் முழங்கால் ஊன்றியே வாசித்திருக்கிறார். இத்தகைய மாமனிதரைக் குறித்தே இந்த மாதம் அறிந்துக் கொள்வோம்.

### ஜார்ஜ் முல்லரின் ஆரம்ப காலம்

ஜார்ஜ் முல்லரின் ஆரம்பகால வாழ்க்கை துன்மார்க்கம் நிறைந்தே காணப்பட்டது. பாவியை தேடி வந்த இயேசு கிறிஸ்து இவரையும் ஒருநாள் சந்தித்தார். ஒரு நாள் இவருடைய நண்பர் பீட்டர் ஒரு ஜெப கூட்டத்திற்கு இவரை அழைத்துச் சென்றார். அங்கு பாடிய பாடல்கள், கேட்ட வேத வசனங்கள், ஜெபம் அனைத்தும் இவர் மனதை தொட்டது. இவர் வாழ்வை மாற்றியது.

நல்ல நிலத்தில் விழுந்த விதை நூறாக பலன் தருவது போல இவரும் பலன் தர ஆரம்பித்தார். துன்மார்க்கத்தில் மகிழ்ந்திருந்த ஜார்ஜ் முல்லர் வேதம் வாசிப்பதில் மகிழ்ச்சி அடைய ஆரம்பித்தார். பாவத்தை நோக்கி ஓடிய கால்கள் முழங்காலில் இருந்து ஜெபிக்க ஆரம்பித்தன.

### ஆதரவற்ற குழந்தைகளுடன் ஜார்ஜ் முல்லர்

இயேசுவின் மனதுருக்கம் இவருக்குள் வந்தது. தெருவில் ஏராளமான குழந்தைகள் அனாதைகளாக சுற்றி திரிவதை பார்த்து மனம் வருந்தினார். பசிக்காக அந்த குழந்தைகள் திருடுவதை பார்த்து கலங்கினார். உடனே அவர்களை ஆதரிக்க வேண்டும் என உறுதி எடுத்தார். வாடகை கட்டிடத்தில் 300 பிள்ளைகளை வைத்து பராமரிக்க ஆரம்பித்தார். தேவைகள் நிறைந்த பொழுது இவர் மனிதரை நாடியதில்லை. தேவனையே சார்ந்திருந்தார்.

ஒரு நாள் பிள்ளைகளுக்கு கொடுப்பதற்கு உணவு இல்லை. அதற்காக உருக்கமாய் ஜெபித்தார். அதன்பின் உணவு அருந்தும் நேரம் வந்து விட்டது. ஆனால் உண்பதற்கு உணவு இல்லை. விசுவாசத்தை விடவில்லை. பிள்ளை களை சாப்பிடுவதற்கு அமர வைத்தார். சாப்பிடு வதற்கு முன் சொல்கிற வழக்கமான ஜெபத்தையும் சொல்லும்படி சொன்னார். ஜெபம் முடிந்தது. அடுத்து உணவு பரிமாற வேண்டும்.

கதவு தட்டும் சத்தம் கேட்டது. திறந்து பார்த்தால் பேக்கரி கடை முதலாளி நின்று கொண்டிருந்தார். "நேற்றை தினமே உங்கள் இல்லத்திற்கு தேவையான பிரட் கொடுக்கும்படி கர்த்தர் எனக்கு அறிவுறுத்தினார்" என்று கூறி பிரட் பாக்கெட்டுகளை கொடுத்து விட்டு சென்றார். அவர் சென்ற பிறகு இன்னொருவர் வந்து கதவை தட்டினார். திறந்தப்பொழுது அவர் கூறியது, "எங்களுடைய பால் வாகனம் பழுதடைந்து விட்டது. அதை சரி செய்து செல்ல நேரம் ஆகும். அதற்குள் பால் அனைத்தும் கெட்டுவிடும். ஆகவே நீங்கள் இந்த பால் டின்களை வாங்கிக் கொள்ளுங்கள்" என்று கூறி அன்போடு கொடுத்து விட்டு சென்றார்.

ஆண்டவரின் பராமரிப்பை பாருங்கள். அதிசய மானவர் எவ்வளவு ஆச்சரியமாய் நடத்தி யிருக்கிறார்!

## ஜார்ஜ் முல்லரின் மிஷனெரி பயணம்

ஜார்ஜ் முல்லர் தன்னுடைய 70 வயதிற்குப் பிறகும் 17 மிஷனெரிப் பயணங்களை மேற் கொண்டார். 42 நாடுகளைச் சுற்றி இருபது இலட்சம் மைல்கள் பயணம் செய்து ஆயிரக் கணக்கான பிரசங்கங்கள் செய்து முப்பது லட்சம் மக்களுக்கு கிறிஸ்துவின் அன்பை எடுத் துரைத்தார்.

உலகமெங்கும் நற்செய்தி அறிவிக்க 189 மிஷனெரிகளை "உலக நற்செய்தி மிஷன்" என்ற தமது நிறுவனத்தின் மூலம் தாங்கினார். ஆண்டவர் பயன்படுத்திய அற்புதப் பாத்திரம் இவர்! ஆதரவற்ற குழந்தைகளுக்கு தந்தையாக வாழ்ந்த ஜார்ஜ் முல்லர் தனது 93-ம் வயதில் நித்திய வாழ்வை பெற்றார்.










# Rev.Dr. A. ஜாஷ்வா அவர்கள் ஜெபத்தினால் மகத்துவ தேவன் செய்த அற்புதங்கள்! தேவ நாமம் மகிமைக்காக!



## மரண நோயிலிருந்து விடுவித்து ஜீவனை தந்த தேவன்!



என் பெயர் மரியம். என்னுடைய உறவினர் பெயர் மெட்டில்டா. அவளுக்கு பிரசவம் முடிந்து, ஒரு சில நாளில் அவளுடைய கிட்னி, இரத்தம், நுரையீரல் அனைத்தும் கிருமி தொற்றினால் பாதிக்கப்பட்டு ஒருவித ஆபத்தான நிலைக்கு வந்துவிட்டாள். உடனே திருச்சியிலுள்ள ABC மருத்துவமனையில் அட்மிட் செய்தோம். பரிசோதித்த மருத்துவர்கள் இனி ஒன்றும் செய்ய முடியாது என கைவிட்டனர்.

அந்த நேரத்தில் அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்திற்கு நான் வந்தேன். அப்பொழுது Rev. Dr. A. ஜாஷ்வா அவர்களிடம் மெட்டில்டாவின் நிலையை சொல்லி ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டேன். பாஸ்டர் அவர்கள் பாரத்துடன் ஜெபித்தார்கள். ஜெபித்துவிட்டு அவர்களுடைய கைக்குழந்தையின் நிமித்தம் கர்த்தர் அந்த சகோதரிக்கு ஜீவனை மீட்டு தருவார். நீங்கள் சாட்சி சொல்ல வருவீர்கள் என்று சொல்லி அனுப்பினார்.

அதன்பின் இரண்டே நாளில் அற்புதமாய் அவள் சரீர சுகத்தில் முன்னேற்றம் அடைந்து ICU-லிருந்து, சாதாரண வார்டுக்கு மாற்றப்பட்டாள். தொடர்ந்து பரிபூரண சுகம் பெற்று அவள் வீடு திரும்பும்படி கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தருக்கு எங்கள் ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறோம். இக்கட்டான நேரத்தில் ஜெபித்த பாஸ்டர் அவர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

- சகோதரி மரியம், சமயபுரம்.

## நெஞ்சுவலியை நீக்கி சுகம் கொடுத்த கர்த்தர்!



என் பெயர் பேரின்பமுத்து. 8 வருடத்திற்கு முன்பாக எனக்கு இருதய பெலவீனம் இருந்தது. அதனால் அதிக கஷ்டங்களை அனுபவித்தேன். நாகர்கோவிலுக்கு Rev. Dr. A. ஜாஷ்வா அவர்கள் வந்திருந்தப்பொழுது என் பிரச்சனையை சொன்னேன். உடனே பாஸ்டர் அவர்கள் என் நெஞ்சில் கை வைத்து ஜெபித்தார்கள். இனி எந்த விதமான வலியும் வராது என சொல்லி அனுப்பினார்கள். அன்றிலிருந்து இன்று வரை என் இருதயத்தில் எந்தவொரு வலியும் இல்லாமல் நல்ல சுகத்துடன் இருக்கிறேன். அற்புத விடுதலை தந்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

- சகோ. பேரின்ப முத்து, நாகர்கோவில்.

## ஜெப நேரத்தில் கைவலியை நீக்கிய கர்த்தர்!



என் பெயர் ஜார்ஜ். எனக்கு திடிரென கைவலி ஏற்பட்டு 30 நாட்களாக அதிக கஷ்டங்களை அனுபவித்தேன். கையை அசைக்க முடியவில்லை. கையினால் சாப்பிடவும் முடியவில்லை. அந்த அளவிற்கு கஷ்டப்பட்டேன். கடந்த வருடம் நவம்பர் மாதம் நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்தேன். ஜெப வேளையில் Rev. Dr. A. ஜாஷ்வா அவர்கள் சரீர பெலவீனங்களோடு வந்தவர்களுக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். நானும் இணைந்து ஜெபித்தேன். அந்த நேரமே என்னுடைய கைவலி முற்றிலும் நீங்கிவிட்டது. இப்பொழுது கையை நன்றாக தூக்க முடிகிறது. சுகம் கொடுத்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

- சகோ. ஜார்ஜ், ஈத்தாமொழி.

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

திருச்சியில்

# அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

குடும்பமாய் வாருங்கள்! ஆசீர்வாதமாய் வாழுங்கள்!

நேரம் :
காலை 9.30 மணி
முதல்
மதியம் 2.00 மணி
வரை



ஜூன் 24 சனிக்கிழமை

தொடர்புக்கு
94888 45627
0431- 2741925

இடம் : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்,
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி - 18

தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா மற்றும் குடும்பத்தினர்

# நாகர்கோவிலில்

## பங்காளர்களுக்கான தனிஜெபம் & ஆலோசனை

இடம் : அபிஷேக் காம்ப்ளக்ஸ்,
மெத்தகடை மாடி, W.C.C. ரோடு, நாகர்கோவில்

ஜூன் 10 சனிக் கிழமை

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை
மாலை 4.00 மணி முதல் 7.30 மணி வரை

ஜெபம் & ஆலோசனை : Dr. ஆனந்த ஸ்திரா

தொடர்புக்கு: 94888 45627 82203 17472

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,